பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி-சென்னை-4

*27 12 2025* SATURDAY *7 15* AM

ஆகாஷவாணி - செய்திகள்

<u>தலைப்புச் செய்திகள்</u>

- *Charishma, Rakshita Shree* ஆகியோர் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளனர். குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, கோவா, கர்நாடகா மற்றும் ஜார்க்கண்ட் மாநிலங்களில் இன்று முதல் 4 நாட்கள் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்கிறார்.

- காசநோய் இல்லாத இந்தியாவை உருவாக்க சுகாதாரத்துறையில் சீர்திருத்தங்களை மேற்கொள்ள வேண்டியதன் அவசியத்தை மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் திரு.ஜெ.பி.நட்டா வலியுறுத்தியுள்ளார்.

- நடப்பாண்டில் முக்கிய பண்டிகைகள் மற்றும் நெரிசல் மிகுந்த காலங்களில் 43 ஆயிரம் சிறப்பு ரயில்கள் இயக்கப்பட்டதாக ரயில்வே கூறியுள்ளது.

- சோமாலியாவிலிருந்து பிரிந்து சென்று, தன்னாட்சி கோரி வரும் *Somaliland* பகுதியை, ஒரு தனி நாடாக இஸ்ரேல் அங்கீகரித்துள்ளது.

- தேசிய சீனியர் பேட்மிண்டன் போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவில் *Surya*

>>>>>><<<<<<

குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, கோவா, கர்நாடகா மற்றும் ஜார்க்கண்ட் மாநிலங்களில் இன்று முதல் 4 நாட்கள் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்கிறார்.

இதற்காக, இன்று அவர் கோவா புறப்பட்டுச் செல்கிறார்.

நாளை, கர்நாடக மாநிலம், கார்வார் துறைமுகத்தில் நீர்மூழ்கி கப்பலில் பயணம் மேற்கொண்டு, நாட்டின் பாதுகாப்பு திறனை ஆய்வு செய்யவுள்ளார்.

இதனைத் தொடர்ந்து, நாளை மறுநாள், ஜார்க்கண்ட் மாநிலம், ஜாம்ஷெட்பூரில் நடைபெறவுள்ள *Olchiki* வரிவடிவத்தின் நூற்றாண்டு விழாவில அவர் கலந்து கொள்கிறார்.

*Santhali* மொழிக்காக, கடந்த 2025ஆம் ஆண்டு ரகுநாத் முர்மு என்பவரால் உருவாக்கப்பட்ட இந்த வரி வடிவம், சந்தால் பழங்குடியின மக்களின் அடையாளம் மற்றும் கலாச்சாரத்தின் முக்கிய அங்கமாக கருதப்படுகிறது.

அதே நாளில், ஜாம்ஷெட்பூர் தேசிய தொழில்நுட்ப கழகத்தின் 15வது பட்டமளிப்பு விழாவிலும் அவர் பங்கேற்கிறார்.

*தனது பயணத்தின் கடைசி நாளான 30ஆம் தேதி, ஜார்க்கண்ட் மாநிலம் Gumla-வில் நடைபெறும் Krtik Jatra கலாச்சார விழாவிலும் குடியரசுத்தலைவர் பங்கேற்று உரையாற்றவுள்ளார்.*

>>>>>><<<<<<

*2027-ஆம் ஆண்டிற்குள் காசநோய் இல்லாத இந்தியாவை உருவாக்க, சுகாதாரத்துறையில் சீர்திருத்தங்களை மேற்கொள்ள வேண்டியதன் அவசியத்தை மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் திரு. ஜெ. பி. நட்டா வலியுறுத்தியுள்ளார்.*

*புதுதில்லியில் நேற்று மத்தியப் பிரதேசம் மற்றும் சத்தீஸ்கர் மாநில சுகாதாரத்துறை அதிகாரிகளுடன் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் பேசிய அவர், காசநோயை ஒழிக்க மாவட்ட மற்றும் வட்டார அளவில் கண்காணிப்பை தீவிரப்படுத்த வேண்டும் என்றும் நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஊட்டச்சத்து உதவிகளை வழங்க வேண்டும் என்று அறிவுறுத்தினார்.*

*மருந்து விநியோகச் சங்கிலியில் உள்ள இடைவெளிகளை களைந்து, இலவச மருந்துகள் மற்றும் பரிசோதனைத் திட்டங்களை மாநிலங்கள் விரைவுபடுத்த வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.*

*மருந்து கொள்முதலில் வெளிப்படைத்தன்மையை கொண்டுவர அஹமதாபாதில் உள்ள இந்திய நிர்வாகவியல் கல்வி நிறுவனத்துடன் இணைந்து மத்திய அரசு பணியாற்றி வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.*

>>>>>><<<<<<

*நடப்பாண்டு முக்கிய பண்டிகைகள் மற்றும் நெரிசல் மிகுந்த காலங்களில் 43 ஆயிரம் சிறப்பு ரயில்கள் இயக்கப்பட்டதாக ரயில்வே கூறியுள்ளது.*

*இதன் வாயிலாக பயணிகளுக்கு சீரான, பாதுகாப்பான மற்றும் வசதியான பயணத்தை உறுதி செய்ததாக ரயில்வே தெரிவித்துள்ளது.*

*மகா கும்பமேளாவிற்காக ஜனவரி 13 ஆம் தேதி முதல் பிப்ரவரி 28 ஆம் தேதி வரை 17,340 சிறப்பு ரயில்கள் இயக்கப்பட்டது.*

*ஹோலி பண்டிகையை முன்னிட்டு கடந்த மார்ச் 1 ஆம் தேதி முதல் மார்ச் 22 ஆம் தேதி வரை, 1,144 சிறப்பு ரயில்கள் இயக்கப்பட்டன.*

*இது 2024 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தில் இயக்கப்பட்ட எண்ணிக்கையைவிட இரு மடங்கு ஆகும் என்று ரயில்வே தெரிவித்துள்ளது.*

*கோடைக்காலத்தில், 12 ஆயிரத்து 417 சிறப்பு ரயில்கள் இயக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*சத் பூஜையை முன்னிட்டு அக்டோபர் 1 ஆம் தேதி முதல் நவம்பர் 30 ஆம் தேதி வரை 12 ஆயிரத்து383 சிறப்பு ரயில்கள் இயக்கப்பட்தாகவும் ரயில்வே கூறியுள்ளது*

**>>>>>><<<<<<**

*அஸ்ஸாம் மாநிலத்தில் அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள சட்டப்பேரவை தேர்தலில் மீண்டும் பிஜேபி வெற்றிபெற்று, ஆட்சியமைக்கும் என்று மத்திய அமைச்சர் திரு. சர்பானந்த சோனோவால் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.*

*குவஹாத்தியில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர், பிஜேபி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி அரசு, மாநிலத்தில் தொடர்ந்து ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றினால் தான், தற்போது நடைபெற்று வரும் வளர்ச்சிப் பணிகள் தடையின்றி நிறைவேற்றப்படும் என்று கூறினார்.*

**>>>>>><<<<<<**

*பாரம்பரியத்தையும், நவீனத்தையும் இணைப்பதில் இந்தியா வெற்றிபெற்றுள்ளதாக மத்திய அறிவியல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு. ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.*

*புதுதில்லியில் நேற்று பாரதீய அறிவியல் அமைப்பின் தொடக்க விழாவில் பேசிய அவர், கடந்த பத்தாண்டுகளில் மத்திய அரசு, அறிவியல் வளர்ச்சியை அடுத்த கட்டத்திற்கு கொண்டு செல்லும் வகையில், மத்திய பட்ஜெட்டில் அதிக நிதியை ஒதுக்கியதாக தெரிவித்தார்.*

*2014ஆம் ஆண்டு 300 முதல் 400 என்ற அளவில் இருந்த புத்தொழில் நிறுவனங்களின் எண்ணிக்கை, தற்போது 2 லட்சமாக அதிகரித்துள்ளது என்றும் அவர் கூறினார்.*

*உலகளாவிய கண்டுபிடிப்பு குறியீட்டில் இந்தியா 81வது இடத்திலிருந்து 38வது இடத்திற்கு முன்னேறியுள்ளது என்றும் திரு. ஜிதேந்திர சிங் தெரிவித்தார்.*

**>>>>>><<<<<<**

*சத்திஷ்கட் மாநிலத்தில் இதுவரை 2 ஆயிரத்திற்கு மேற்பட்ட மாவோயிஸ்ட்டுகள் சரணடைந்துள்ளதாக அம்மாநில முதலமைச்சர் திரு. விஷ்னு தியோ சாய் தெரிவித்துள்ளார்.*

*ராய்ப்பூரில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், மீதமுள்ள மாவோயிஸ்ட்டுகளும், வன்முறையை கைவிட்டு, சரணடையுமாறு அழைப்பு விடுத்தார்.*

*சரணடையும் மாவோயிஸ்ட்டுகளுக்கு அரசு, மறுவாழ்வுக்கான ஏற்பாடுகளை செய்து தரும் என்றும், ஏற்கனவே பலருக்கு செய்து தரப்பட்டுள்ளது என்றும் திரு. விஷ்னு தியோ சாய் கூறினார்.*

*முன்னதாக, பிஜப்பூர் மாவட்டத்தில் 34 மாவோயிட்டுகள், தங்களது ஆயுதங்களை காவல்துறையினரிடம் ஒப்படைத்து விட்டு, சரணடைந்தனர்.*

**>>>>>><<<<<<**

*உன்னாவ் பாலியல் வன்கொடுமை வழக்கில் தண்டனை பெற்ற முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் குல்தீப் சிங் செங்காரின் ஆயுள் தண்டனையை நிறுத்தி வைத்து, அவருக்கு ஜாமீன் வழங்கிய தில்லி உயர் நீதிமன்றத்தின் உத்தரவை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் சிபிஐ மேல்முறையீடு செய்துள்ளது.*

*இது தொடர்பாகச் சிபிஐ சார்பில் நேற்று உச்சநீதிமன்றத்தில் சிறப்பு விடுப்பு மனு தாக்கல் செய்யப்பட்டது.*

*முன்னதாக, இந்த வாரத் தொடக்கத்தில் குல்தீப் சிங் செங்காரின் மேல்முறையீட்டு மனு நிலுவையில் உள்ளதைக் கருத்தில் கொண்டு, அவருக்கு நிபந்தனை ஜாமீன் வழங்கி தில்லி உயர்நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.*

*கடந்த 2019-ஆம் ஆண்டு, உத்தரப்பிரதேசத்தின் உன்னாவ் பகுதியில் நிகழ்ந்த பாலியல் வன்கொடுமை வழக்கில், குல்தீப் சிங் செங்காருக்கு, சிபிஐ சிறப்பு நீதிமன்றம் ஆயுள் தண்டனையும், 25 லட்சம் ரூபாய் அபராதமும் விதித்தது.*

இந்நிலையில், உயர்நீதிமன்றம் செங்காரை ஜாமினில் விடுவிக்க உத்தரவிட்டுள்ளதற்கு, பாதிக்கப்பட்ட பெண் மற்றும் அவரது குடும்பத்தினர் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

>>>>>><<<<<<

சபரிமலை ஐயப்பன் கோவிலில் முக்கிய நிகழ்வான 'மண்டல பூஜை' இன்று நடைபெறுகிறது.

இதையொட்டி, ஐயப்ப சுவாமிக்கு திருவிதாங்கூர் மன்னர் குடும்பத்தாரால் வழங்கப்பட்ட புனித 'தங்க அங்கி' அணிவிக்கப்பட்டு, மகா தீபாராதனையும் சிறப்பு வழிபாடுகளும் நடைபெறவுள்ளன.

பக்தர்களின் வருகையை முன்னிட்டு, விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகளும் மருத்துவ வசதிகளும் செய்யப்பட்டுள்ளன.

கூட்ட நெரிசலைக் கட்டுப்படுத்த 'மெய்நிகர் வரிசை' முறை மற்றும் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான உடனடி முன்பதிவு மூலம் தரிசனம் முறைப்படுத்தப்பட்டுள்ளது.

இன்றைய மண்டல பூஜைக்குப் பின் நடை அடைக்கப்பட்டு, மீண்டும் மகர விளக்கு பூஜைக்காக வரும் டிசம்பர் 30-ஆம் தேதி நடை திறக்கப்படும்.

>>>>>><<<<<<

சோமாலியாவிலிருந்து பிரிந்து சென்று, தன்னாட்சி கோரி வரும் Somaliland பகுதியை, ஒரு தனி நாடாக இஸ்ரேல் அங்கீகரித்துள்ளது.

இதன் மூலம் சோமாலிலாந்தை அங்கீகரிக்கும் முதல் நாடு என்ற பெயரை இஸ்ரேல் பெற்றுள்ளது.

டெல்அவிவில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய இஸ்ரேல் பிரதமர் திரு. பெஞ்சமின் நெத்தன்யாஹூ, வேளாண்மை, சுகாதாரம் மற்றும் தொழில்நுட்பத் துறைகளில் சோமாலிலாந்துடன் உடனடியாக ஒத்துழைப்பை விரிவுபடுத்த இஸ்ரேல் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

இந்த முடிவை ஒரு 'வரலாற்றுத் தருணம்' என சோமாலிலாந்து அதிபர் அப்டிரஹ்மான் முகமது அப்துல்லாஹி வரவேற்றுள்ளார்.

இரு நாடுகளுக்கும் இடையே தூதரக உறவுகளை ஏற்படுத்தவும், உடன்பாடு எட்டப்பட்டுள்ளதாகவும் இஸ்ரேல் வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இஸ்ரேலின் இந்த நடவடிக்கைக்குச் சோமாலியா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

இது தங்கள் நாட்டின் இறையாண்மை மீதான தாக்குதல் என சோமாலிய பிரதமர் திரு.Hamza Abdi Barre குற்றம் சாட்டியுள்ளார்.

இதேபோல், எகிப்து, துருக்கி ஆகிய நாடுகளும் இஸ்ரேலின் இந்த அறிவிப்பை நிராகரித்துள்ளன.

இது சர்வதேச சட்டங்களுக்கும் ஐக்கிய நாடுகள் சபையின் விதிகளுக்கும் எதிரானது என்றும், இத்தகைய ஒருதலைப்பட்சமான நடவடிக்கைகள் பிராந்திய அமைதியைக் குலைக்கும் என்றும் எகிப்து கூறியுள்ளது.

>>>>>><<<<<<

பங்களாதேஷின் சட்டோகிராம் பகுதியில் நேற்று நிலநடுக்கம் ஏற்பட்டது.

இது ரிக்டர் அளவில் 3.9 ஆக பதிவாகியுள்ளதாகத் தேசிய நில அதிர்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்த நிலநடுக்கம், பூமிக்கு அடியில் 10 கிலோமீட்டர் ஆழத்தில் ஏற்பட்டதாக கூறப்பட்டுள்ளது.

c/o இந்த நில அதிர்வினால் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்த தகவல் இதுவரை வெளியாகவில்லை.

இந்திய, யூரேசிய மற்றும் பர்மா ஆகிய மூன்று பிரம்மாண்ட புவித்தட்டுச் சந்திப்புகளுக்கு நடுவே பங்களாதேஷ் அமைந்துள்ளதால், அங்கு நில அதிர்வுகள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம் என புவியியல் வல்லுநர்கள் தெரிவிக்கின்றனர்.

>>>>>><<<<<<

விஜயவாடாவில் நடைபெறும் தேசிய சீனியர் பேட்மிண்டன் போட்டியில், Surya Charishma அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

நேற்று நடைபெற்ற மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர், 21-12, 21-15 என்ற செட்கணக்கில் Unnati Hooda-வை வென்றார்.

மற்றொரு காலிறுதியில் Rakshita Shree, 16-21, 21-14, 21-18 என்ற செட்கணக்கில் தன்வி சர்மாவை வென்றார்.

*அரையிறுதி ஆட்டத்தில் Surya Charishma-Rakshita Shree-யை எதிர்கொள்ளவுள்ளார்.*

*ஆடவர் பிரிவில் கிரண் ஜார்ஜ், ரித்விக் சஞ்சீவி ஆகியோர் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.*

>>>>>>END<<<<<<<